JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 24.01.2023

**CC.No.95/2014 Name:Subramani S/o.Gurusamy PW2**

<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா.2 அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1)அ.சா.1 சரசாள் என்னுடைய சொந்த அக்கா ஆவார். எனக்கு எழுத படிக்க தெரியாது. ஆனால் கையொப்பம் செய்வேன். எந்த தேதியில் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் 12.09.2011 ம் தேதியில் இருந்து மூன்று நாட்கள் கழித்து போலிசார் என்னை விசாரித்தார்கள். அ.சா.1 சரசாள் என்னுடைய பக்கத்து வீட்டில் குடியிருக்கிறார்.

2)என்னுடைய ஒர்க் ஷாப் பெருந்துறையில் உள்ளது. நான் தினமும் எத்தனை மணிக்கு ஒர்க் ஷாப்பை பூட்டிவிட்டு வீட்டிற்கு செல்வேன் என்றால் இரவு 8.30 மணிக்கு செல்வேன். அ.சா.1 சரசாள் தங்க நகை போட்டிருந்தாரா அல்லது கவரிங் நகை போட்டிருந்தாரா என்றால் தங்க நகைதான் போட்டிருந்தார்.

3)போலிசார் என்னை முதலில் விசாரித்து சென்ற பின்னர் மீண்டும் என்னை விசாரித்தாரா என்றால் இல்லை. அ.சா.1 சரசாளுக்காக சாட்சி சொல்கிறேனா அல்லது போலிசார் கேட்டுகொண்டதற்கிணங்க சாட்சி சொல்கிறேனா என்றால் சாட்சி சரசாளுக்காகதான் சாட்சி சொல்கிறேன். அ.சா.1 காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததை நான் பார்க்கவில்லை.

4)சம்பவத்தை பற்றி நான் கேள்விபட்டு தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

போலிசார் கேட்டுகொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 24.01.2023

**CC.No.95/2014 Name:Selvaraj S/o.Perumal PW3**

<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா.3 அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1)நான் தான் செல்வராஜ் என்பதை காண்பிக்க என்னுடைய அடையாள அட்டைகள் நிறைய உள்ளது. பேங் புக் உள்ளது. அதை நான் இன்று நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டு வந்துள்ளேன். போலிசார் எந்த தேதியில் சம்பவ இடத்தை பார்வையிட வந்தார்கள் என்றால் சம்பவம் நடந்த மூன்று நாட்கள் கழித்து 15.09.2011 ம் தேதியில் இரவு சுமார் 9 மணி அளவில் வந்தார்கள். பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்த போலிசாரின் பெயர் எனக்கு தெரியாது. ஆனால் அவர் இன்ஸ்பெக்டர் அவார்.

2)எனக்கு எழுத படிக்க தெரியும். எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். போலிசார் என்னை மட்டும்தான் விசாரித்தார்களா என்றால் அங்கிருந்தவர்களையும் விசாரித்தார்கள். எவ்வளவு நேரம் அங்கிருந்தார்கள் என்றால் சுமார் அரை மணி நேரம் இருந்திருப்பார்கள். என்னுடைய வீட்டிற்கும், அ.சா.1 ன் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 20 அடி தூரம் இருக்கும். அ.சா.1 சரசாளை எப்போது இருந்து தெரியும் என்றால் நான் ஐந்தாவது படிக்கும்போதிலிருந்து தெரியும். பார்வை மகசரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது தெரியுமா என்றால் ஒரு வரைபடம் வரைந்து அதில் ஒவ்வொரு இடமும் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்பது பற்றி எழுதப்பட்டிருந்தது. அதில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விசாரித்தார்கள்.

3)அ.சா.1 சரசாள் எனக்கு அத்தை உறவு முறை வேண்டும். போலிசார்

கேட்டுகொண்டதற்கிணங்க சாட்சி சொல்கிறேன் என்றால் சாட்சி கையொப்பம் செய்ததற்காக சாட்சி சொல்ல வரும்படி கேட்டார்கள் அதற்காக வந்தேன். போலிசார் சொல்லி கொடுத்ததுபோல் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.